# தி.மு.க. வர்த்தகர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

II ஆம் பக்கத் தொடர்ச்சி

### சூளகிரி வடக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - சேகர் குட்டலப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) பி. பொன்னுசாமி திராடி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் 2) ஆர். சீனிவாசன் அனுசோனை கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் 3) ஆர். வெங்கடேஷ் பீளாளம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் 4) டி. ஸ்ரீதர் செட்டிப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் 5) எம். பாலகிருஷ்ணன் தொரிப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### சூளகிரி தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ஜி. சேகர் உத்தனப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) ஸ்ரீராமன் தியாகரசனப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் 2) கோபி டி. கொத்தப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் 3) ராமகிருஷ்ணன் எலிசேப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் 4) கே. கிருஷ்ணன் மேடுப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் 5) டி. சிவக்குமார் பி. கொத்தப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் 6) டி. திம்மராயன் அக்ரஹாரம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்

### கெலமங்கலம் கிழக்கு ஒன்றியம்

தலைவர் - ஆர்.பி. வெங்கடாஜலம் 1/330, போலிஸ் ஸ்டேசன் அருகில், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணைத் தலைவர் - முனிராஜ் 4/26, நாயுடு தெரு, ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்

அமைப்பாளர் - சிவக்குமார் 22/72, தொட்டதிம்மனஹள்ளி கிராமம், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) துருவாசன் 1/515, ரகமத் காலனி, ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம் 2) பன்னீர்செல்வம் 3/15, எடவனஹள்ளி கிராமம், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம் 3) முனிராஜ் 2/19, தொட்டதிம்மனஹள்ளி கிராமம், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம் 4) கோவிந்தன் 3/176, குட்டூர் கிராமம், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம் 5) வேல் பழையூர் கிராமம், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

### கெலமங்கலம் மேற்கு ஒன்றியம்

தலைவர் - முருகன் ஜெயபுரம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் துணைத் தலைவர் - பலராமன் மனியம்பாடி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் அமைப்பாளர் - சம்பத் இருதுகோட்டை கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) கனகராஜ் கோட்டை உலிமங்கலம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் 2) கோவிந்தராஜ் ஒசஹள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் 3) வெங்கடேஷ் கோட்டை உலிமங்கலம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் 4) வெங்கடராஜப்பா தாவரைக்கரை கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் 5) கோபாலப்பா தாவரக்கரை கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்

### தளி வடக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - பி.கே. சிவசங்கர் பேளகொண்டப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ்.பி.பி. பிரபாகர் கலுகொண்டப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) ஒய் பிரகாஷ் கொத்தஜீகூர் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) என். முனிராஜீ கொமரனப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) முனிராஜ் கொர்னூர் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 5) சுரேஷ் கப்பக்கல் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### தளி தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - கெம்பன்னா கெம்பத்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) சூனேகவுடா தளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) ஸ்ரீகாந்தா சாவரபத்தம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) பழனி காந்தி நகர் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) முருகேஷ் படிகனாளம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 5) ஜெ. மணு பி.பி. பாளையம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### அஞ்செட்டி ஒன்றியம்

அமைப்பாளர் - நாகராஜ் கோன்மக்கனப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) மஞ்சுநாத் அருளாலம் கிராமம் கிருஷ்ணகிரி மாவட்டம். 2) மாதேஷ் அருளாலம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) பசுவராஜ் தொட்டமஞ்சி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) சந்திரன் மடம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 5) சிக்கிரையர் மடம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### தேன்கனிக்கோட்டை பேரூர்

அமைப்பாளர் - ஜி. சங்கர் பிரசாத் தெரு, தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) செல்வ முத்துகுமார் நேரு தெரு, தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம் 2) நாகராஜ் நேரு தெரு, தேன்கனிக்கோட்டை கிருஷ்ணகிரி மாவட்டம் 3) எம். நதீம் காஜி ஷாகீப் தெரு, தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம் 4) சமியுல்லா காஜி ஷாகீப் தெரு, தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்

### கெலமங்கலம் பேரூர்

அமைப்பாளர் - ரியான் சுல்தன்பேட், கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) அம்ரேஷ் அண்ணா நகர், கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) சாதிக்பாஷா பட்டாளம்மன் கோவில் தெரு, கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) ஹரிநாத் பட்டாளம்மன் கோயில் தெரு, கிருஷ்ணகிரி மாவட்டம். 4) ராமச்சந்திரன் நேதாஜி நகர், கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

## ஒசூர் மாநகரம்

### ஒசூர் வடக்கு பகுதி

அமைப்பாளர் - குணசேகரன் வெங்கடேஷ்வரா நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். பாபு மூக்கொண்டப்பள்ளி, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) நாகராஜ் எம்.எம்.நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) பாலாஜீசிங் டி.என்.எச்.பி. ஹவுசிங் போர்டு, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) கார்த்திகேயன் வெங்கடேஷ்வரா நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 5) அன்பழகன் சத்யா நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### ஒசூர் தெற்கு பகுதி

அமைப்பாளர் - ஜி. ஆஞ்சியப்பா அந்திவாடி, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பரத் எம்.எஸ். கார்டன், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) சுரேஷ் பெரியார் நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) வி. ஆனந்த் அண்ணா நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) பிரதீப் எஸ்.பி.எம். காலனி, டி.வி.எஸ். நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### ஒசூர் கிழக்கு பகுதி

அமைப்பாளர் - சுப்பிரமணி ராம் நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ராகுல் சீதாராம் நகர் , ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) கிருஷ்ணமூர்த்தி சீதாராம் நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) சதீஷ்குமார் மின் நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) கிரண்குமார் ஆர்.கே. ரோடு, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 5) லியாகத் மில்லத் நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### ஒசூர் மேற்கு பகுதி

அமைப்பாளர் - பாலாஜி பி.டி.ஆர். நகர். ஜீஜீவாடி, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம்.சி. ஆரோக்கியசாமி பாலாஜி நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) ஆர். வினோத்குமார் பூங்கா நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) எ. சுனில் அலசநத்தம், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) கே. கோபி காந்தி சாலை, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 5) இம்ரான் பஸ்தி, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 28-11-2024.

**காசிமுத்து மாணிக்கம்**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி





வனத்துறை அமைச்சர் முனைவர் க பொன்முடி, விழுப்புரம் மாவட்டம் இருவேல் பட்டு கிராம மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர் என்பதை அறிந்து இருவேல்பட்டு கிராமத்திற்கு நேரில் சென்று மக்களோடு, மக்களாக சேற்றில் இறங்கி நடந்து சென்று பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். அப்போது மாவட்ட ஆட்சியர் சி.பழனியிடம் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை உடனடியாக வழங்க வேண்டும் என வலியுறுத்தினார். மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட எஸ்.பி. தீபக் ஸ்வாச், மாவட்ட பொருளாளர் இராஜ.ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### ச.தங்கவேலு - பரமகுரு - ஜி.பி.ராஜா முன்னிலை!

# தென்காசி வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் முப்பெரும் விழா!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

தென்காசி, டிச.5-

கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா,மாபெரும் பொதுக் கூட்டம் ஆகிய முப்பெரும் விழா நிகழ்வு தென்காசி வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் சங்கரன்கோவில் கலைஞர் திடல் முப்புடாதி அம்மன் கோவில் முன்பு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேலு, பரமகுரு, மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி. ராஜா,தென்காசி மக்களவை உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி, மாநில மருத்துவ அணி துணை செயலாளர் செண்பக விநாயகம், தூத்துக்குடி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்,சங்கரன்கோவில் தொகுதி பார்வையாளருமான பி.எம். ராமஜெயம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.எம்.எஸ். முகேஷ் வரவேற்புரையாற்றினார்.நிகழ்ச்சியை எஸ். மாரிராஜ் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் கழகம் சார்பில் நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் தமிழக அளவில் முதலிடம் பிடித்த மோகநிதி பங்கேற்று உரையாற்றினார்.

பின்னர் ஏழை,எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பேசியதாவது:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் ஆட்சி செய்து வரும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியில் கழக இளைஞரணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் முன்னிட்டு இங்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. தொடர் நிகழ்வாக 147 நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

தென்காசி மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர்,கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணியின் நிர்வாகிகள் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி தென்காசி வடக்கு மாவட்டம் சிறந்த மாவட்டம் என்று பெயர் வாங்க வேண்டும்.

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் குறிக்கோளான எல்லோருக்கும் எல்லாம் அதுதான் திராவிட மாடல் ஆட்சியாகும். அதற்கு உறுதுணையாக கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மக்கள் பணிகளை சிறப்பாக செய்து வருகின்றார்.

கடந்த 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் மக்களுக்கு எந்தவித திட்டங்களும் நிறைவேற்றப்படவில்லை.

ஆனால் கடந்த மூன்றரை ஆண்டுகால ஆட்சியில் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து எண்ணற்ற திட்டங்களை மக்களுக்கு செய்தும் அறிவித்தும் வருகின்றார்.பெண்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதற்காக

மகளிர் உரிமைத் தொகை 1கோடியே 18 லட்சம் பேருக்கு,கட்டணமில்லா பேருந்து வசதி, போட்டித் தேர்வு எழுதும் மாணவ, மாணவிகள் வசதிக்காக அறிவு சார் மையம் தொடங்கப்பட்டுள்ளது.

சங்கரன்கோவிலில் உள்ள அறிவு சார் மையத்தில் தினமும் சுமார் 260 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர் இதில் படித்த 12 பேர் காவல் துறையில் பணியில் சேர்ந்துள்ளனர்.

தி.மு.க. இந்துக்களுக்கு எதிரானது என்ற பொய் பிரச்சாரத்தை முறியடிக்கும் வகையில் சங்கரன்கோவில் சங்கரநாராயணசாமி கோவிலில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் அறிவித்தது போல் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற நாம் அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் கோ.பத்மநாபன்,பொருளாளர் இல. சரவணன்,மாவட்ட துணை செயலாளர் புனிதா, பொதுக்குழு உறுப்பினர் தேவதாஸ்,ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கரபாண்டியன்,கடற்கரை, பூசைப் பாண்டியன் பெரியதுரை, சேர்மதுரை, வெள்ளத்துரை,பால்ராஜ், கிறிஸ்டோபர்,குணசேகரன், நகர செயலாளர்கள் மு.பிரகாஷ் (சங்கரன்கோவில்) அந்தோணிசாமி (புளியங்குடி) பேரூர் செயலாளர்கள் சேது சுப்பிரமணியன், மாரிமுத்து, நகரத் துணை செயலாளர் முத்துகுமார், விவசாய தொழிலாளரணி தலைவர் கலைச்செல்வன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் உதயகுமார், பிரேம் குமார், அப்பாஸ், பசுபதி, சந்திரன், கூட்ட ஒருங்கிணைப்பாளர் ராயல் கார்த்திக், சரவணன், மணிகண்டன், செய்யது இப்ராஹிம் அன்சாரி மற்றும் ஜலால், ஜெயக்குமார், பாலாஜி, ஜான்சன், விக்னேஷ், வீரா, வீரமணி, சிவாஜி உள்பட கழகத்தினர், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் ராஜராஜன் நன்றி உரையாற்றினார்.




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையேற்று, கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கரங்களை வலுப்படுத்திட, பா.ஜ.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து விலகிய புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் நாட்டு மங்களம் ஊராட்சி கொன்னைக்காடு பகுதியைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களாக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் அறந்தாங்கி ஒன்றிய குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஒன்றியம் கடலோரப் பகுதியான வாணகிரி கிராமத்தில் கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதியை மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும் பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பார்வையிட்டு, கிராம தலைவர், பஞ்சாயத்தார்கள் மற்றும் கிராம பொது மக்களிடம் ஆலோசனை மேற்கொண்டார். உடன் சீர்காழி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பஞ்சு குமார், மாவட்ட மீனவரணி அமைப்பாளர் காளி.தேசப்பன்,மாவட்ட பிரதிநிதி எம்.ஆர்.கணேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சிவகாசி மாநகர தி.மு.க. ஐந்தாவது பகுதி கழகத்தின் சார்பில் சிவகாசி ஜானகி அம்மாள் மருத்துவமனையில் கருவுற்ற தாய்மார்களுக்கு பால் பழங்கள், பிரட், பேரிச்சம்பழம் உள்ளிட்ட சத்தானப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கூட்டத்தில் மாநகரச் செயலாளர் உதயசூரியன், மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், சிவகாசி தொகுதி பார்வையாளர் டாக்டர் செண்பகவிநாயகம், மருத்துவர் டாக்டர்.செண்பகதேவி, பகுதி கழகச் செயலாளர்கள் அ.செல்வம், பொதுக்குழு உறுப்பினர் பால்ராஜ், மாவட்ட துணை செயலாளர் ராமமூர்த்தி, மண்டல தலைவர் சேவுகன், மாமன்ற உறுப்பினர்கள் வெயில்ராஜ், பாக்கியலட்சுமி, ஜெயினுலாபுதீன், ஜெயராணி, சாந்தகுமார், அன்பு முருகன், பாண்டியராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில், கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட கழக அலுவலகத்தில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன் தலைமையில் இரத்ததான முகாம் நடைபெற்றது. இதில் தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு இரத்ததானம் செய்து விழாவினை சிறப்பித்தனர்.